உ சிவமயம்.

முனீஸ்வரன் துணை.

பர்மா டாப்

# தற்கால சமுசாரி துயரம்.

[முதல் பாகம்]



இஃது

இராமநாதபுரம் ஜில்லா

வேம்பத்தூர் மகாஜனம்

பச்சேரி அனல்வாக்கு,

**நா. மு. நாக்ஷியப்ப தாஸர்.**

அவர்களால் இயற்றப்பெற்று,

இரங்கோன்

இராமகோட்டி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

1924.

உ
சிவமயம்.
முனீஸ்பரன் துணை.

பர்மா டாப்

# தற்கால சமுசாரி துயரம்.

## காப்பு.

பூமகள் கொழுநன் மலர்மிசை மேலோன் புகழ்ந்திடும்
    பொழிவள மிகுத்த
காமரு மழகாபுரி நிகர்பர்மா கவின்செய்மா
    கழனியி லுழவர்
தேமரு மரியத் தொழிலை யெவர்க்குஞ் சிந்
    தெனும் பாவினாற் செப்ப
கோமரு கோட்டிற் பாரதம் வரைந்த
    கோணடி முடியினிற் கொள்வாம்.

## அள்ளி அள்ளி நீர் குடிக்கும், யென்ற மெட்டு.

(ஆண்) சீரோங்கு மிந்தியரின் செல்லும் தழைத்தோங்கும்
செயபாண்டிய நாடெங்கும் ஜெகமெங்கும்
செய பாண்டிய நாடெங்கும் நல்
    சித்தமகிழ் போற்றி சித்தி விநாயகர்
    முத்தி தனைப்பணி பத்தி மனத்துடன்

(பெண்) சீரும் சிறப்புவமை சொல்லத்துடங்கிற்றீர்
சேயிழை வருமையைப்பற்றி மனம் விற்றீர்
செயிழை வருமையைப்பற்றி காலம்
    செல்வம் நாளும்வரை உள்ளதெல்லாம் விற்று
    சல்லாபமில்லாமற் றொல்லையடைந்திற்றீர்

(ஆண்) தொல்லையடைந்தோமென்று ரேகையே சொல்வது
துலங்கும் பர்மா நல்லது தடையேது
துலங்கும் பர்மா நல்லது நாம்
    துற்கதி நீக்கிட தற்கதி பர்மாவும்
    கற்புள்ள மங்கையே சொர்பனங் கண்டனே.

(பெண்) கனவின் விபாமதை கட்டாயம் சொல்லுங்கள்
கஷ்டத்தை நீக்கி வெல்லுங்கள் வினையைத் தள்ளுங்கள்
கஷ்டத்தை நீக்கி வெல்லுங்கள் தன்

கருத்திலிருத்தி சிரத்தை வகித்து
விருத்தியடுக்கு பொருத்தம் முடித்து.

(ஆண்) நாலு மதத்தர் தங்கள் நாட்டைவிட்டோடியே
நாடும் பர்மாவைத் தேடியே வந்து கூடியே
நாடும் பர்மாவைத் தேடியே மனம்

நாடியே சென்றிட கூடியே துன்றிட
தேடிய பொருளை ஜோடியாய்க் கொண்டிட

(பெண்) ஈரெண்டு மதத்தாரும் யிருப்பிடம் விட்டேகி
யெங்கு செல்கிறார்கள் யேகி யிழைத்தேகி
யெங்கு செல்கிறார்கள் யேகி நீர்

யிதமகிழ்வோது விதமெனக்கூறு
சதமெனத் தொழில் நிதம் துணிவுறு

(ஆண்) பெரியோர் முறைதவரி சிறியோர்கள் கொண்டாட்டம்
பேத மடந்தையர் நாட்டம் மிகுகூட்டம் [டம்
பேத மடந்தையர் நாட்டம் நல்ல

பேரின்ப வேதாந்தம் நேரறிந்து கொண்ட
வாரறிந்து மண்ணில் கூரறிந்து கொள்ளார்.

(பெண்) சிறியோர்கள் செய்யும்முறை சிறியாளுக் குறைப்பீர்
செய்திகள் வருமொழி குரிப்பீர் தெரியவுரைப்பீர்
செய்திகள் வருமொழி குரிப்பீர் சேதி

சித்தம் கலங்கிட வுத்த மனத்துடன்
மெத்தவும் நித்தமும் நத்தி யிருந்திட

(ஆண்) கொஞ்சுங் குழந்தைகளும் கூட்டிக்கொண்டோடியே
கோதை மனைவி வாடியே பொருள் தேடியே
கோதை மனைவி வாடியே மனம்

கோரிக்கையுடனே நாரிக்கை பின்னையே
வாரிக்கை தாண்டிட தேருதல் சொல்லியே

(பெண்) வாடிடேன் ஒருக்காலும் மன்னு யென்னு சொன்னீர்
வருமை யடைந்திட்டேன் முன்னில் என் சென்
வருமை யடைந்திட்டேன் முன்னில் திரு [னில்

வல்லவனென்தலை நல்லவையோடும்
உள்வினை/யிருந்தால் தள்ளமுடிமோ

( ஆண் ) நல்லநா ளின்று தினம் நடப்பது நாம்தேடி
நல்வலம் தெட்சணம் கூடி பதியோடி
நல்வலம் தெட்சணம்கூடி நாம்

நாடிப் பிரயாணம் கூடித்தெரிசனம்
தேடி மதுரைக்கு வாடிநீ யேகுவோம்

(பெண்) அம்பாள் திருவடியை அடிபணிந்து மிகும்
அருமைச் சுந்திரேஸ்ரர் திருமுகம் பாராமுகம்
அருமைச் சுந்திரேஸ்ரர் திருமுகம் நல்

லருமறை புகழ் திருமலரோடு
குருபாதபணி யிருவருங் கூடி

( ஆண் ) சிங்கார வீதிகடை தேரோடும் மதுரையில்
சேயிழையென்ன தேள்வையோ நீசொல்வாயோ
சேயிழையென்ன தேள்வையோ பட்டுச்

சேலைப் புடவையும் மாலைப் பொழுதன்றுமே
விலைக்குவாங்கி பேழையில் வைத்துமே

(பெண்) பட்டுப் பருத்தியூடும் பாங்கான பேடுகள்
பச்சைநீல வர்ணக்கோடுகள் சருகைப்பாடுகள்
பச்சைநீல வர்ணக்கோடுகள் மேலும்

பக்கத்தில்கொட்டடி சொக்கட்டான் கட்டடம்
தக்க விலைக்கதை பக்குவமாய் வாங்கும்

[ ஆண் ) ஏறுவோம் ரயில்வேவண்டி யியல்பாக டிக்கட்டும்
எட்மாஸ்டர் கொடுத்திடும் சீட்டும் டயன்கேட்டும்
எட்மாஸ்டர் கொடுத்திடும் சீட்டும் நாம்

எல்லோரும் கூடி சல்லாபமாக
நல்லாரைத்தேடி செல்லுவோமேகி

[பெண்] ஜனத்தின் பெருமைகளை சாற்றிடா ஸ்டேஷனில்
சல்தியாய் வாங்கிவீர்போகில் சன்னல்தோணில்
சல்தியாய் வாங்கிவீர்போகில் வண்டி
சத்தங்களிட்டுமே மெத்தவிரைவுடன்
பத்து ரெண்டுக்குமேல் லுத்தேசமாகுது

[ஆண்] இருப்பத்திரண்டுவேளை யிருந்துமே பட்டணம்
ஏகிடுவான் திட்டனம் மகா வுஸ்டணம்
ஏகிடுவான் திட்டனம் நேர்
எழும்பூர் ஸ்டேஷன் யிரங்குவோம் கண்ணே
குலிங்கிடும் கப்பல் பாரடி மின்னே

[பெண்] பட்டணத்தின் புதுமை பார்க்கவேணு மன்னா
பழிக்கும் பலவிதம் கண்ணால் ஒளிமின்னா
பழிக்கும் பலவிதம் கண்ணால் பாரும்
பத்தி பத்தியாய் சித்திர வேலைகள்
எத்திசைகளில்லா ரத்தினக் காலுகள்

[ஆண்] சென்னையில் உலாவுதற்கு சித்தமே யில்லடி
ஜீவிக்க பர்மாநாடடி வெகு ஜோரடி
ஜீவிக்க பர்மாநாடடி திங்கள்
சென்றிடுங்காலையில் லன்றுநான் சொல்வேன்
ரெங்கோனதிசயம் தன்றுபாரடி

[பெண்] அப்பர் பர்மா லோயரில் லதிசியமே சொல்லும்
அங்கென்ன நடப்பது வில்லும் அவிடத்திலும்
அங்கென்ன நடப்பது வில்லும் வெகு
அற்புதங்களுண்டோ விற்பனையாபாரம்
சொற்றவறு முத்து ரத்தினம் பற்பல

[ஆண்] வெள்ளிக்கிழமைகாலை விடியுமுன்னாலடி
வெண்கோட்டுத் தோரணஞ்சூடி கப்பலடி
வெண்கோட்டு தோரணஞ் சூடி நால்
வேளைக்குள் மிக்கவே ரேல்வதாய் ரெங்கோனை
காலையில் ரேபதி பூராய் முகல்வீதி

[பெண்] ஏரியிரங்கும்வரை யீசன்பதிதன்னில்
எண்ணியிருப்போம் நெஞ்சினில் தஞ்சமெனில்
எண்ணியிருப்போம் நெஞ்சினில் நாம்
எப்படியாகிலும் முப்பொழுதும் போக்கி
கப்பலடிவிட்டு அப்பால் முகல்ரோட்டு.

(இராமலிங்கமும் முத்தம்மாளும், கப்பலேறுதல்)

## ஆனந்த மானந்த, யென்ற மெட்டு.

[ஆண்] கப்பலேறியிப்பொழுது முப்பொழுதும்போக்குதற்குள்
கண்கள் மயக்குமேதான் முத்தம்மாள் கண்

[பெண்] ஒப்புதில்லை கப்பல்வாசம் குப்பென்று வீசவுமே
ஓயாத வாந்திதானும்—என் சாமியே ஓயா

[ஆண்] செப்பரிய ஒப்பிலாத ரத்தினமே யிப்புவியில்
சேயரோடு வாராடி—முத்தம்மாள் சேய

[பெண்] குடலைப்பிரட்டுதற்கு வுடலைவாட்டுதற்கு
கடலுக்குள் யென்செய்வேனே—என்சாமியே கட

[ஆண்] வாந்தியின் பித்தமது வயிற்றைப்பிரட்டுதற்கு
வழியென்ன செய்வோம் பெண்ணே முத்தம்மாள் வ

[பெண்] மயக்கம் தலைகிருப்பு சயிக்கமுடியிதில்லை
தியக்கமே மெத்தவுண்டு—என்சாமியே திய

[ஆண்] காரமுள்ள சோடாவும் வீரமான பிஸ்கோத்தும்
ஜோராக கொண்டுவாரேன்—முத்தம்மாள் ஜோ

[பெண்] என்றைக்கி ரங்கூனைச் சென்றுபிடிப்பாரோ
ஒன்றும் தெரியவில்லை—என்சாமியே ஒன்

[ஆண்] நாளைக்கு ரெங்கோனில் காலைக்குள்ளாளேயி
லிரக்கிடுவார் நங்கையே—முத்தம்மாள் இரக்

(ரெங்கோன் காக்ஷியைச் சொல்ல)

## அள்ளி அள்ளி நீர்குடிக்கும், யென்ற மெட்டு.

கண்ணில் செழித்தளரும் காதலிபாரடி
கண்காட்சியென்ன சீரடி ரெங்கோன் நேரடி
கண்காட்சியென்ன சீரடி ட்ரும்.
காடிகள் வந்துமே ஜோடியாய் காருகள்
கூடிவருகுது ஓடியே ஙெஞ்சாவும்

ஏரடிசட்க்காவண்டி யிதமாக நாமுமே
எட்டணாப் பேசிப்போகிலும் நடப்பாகிலும்
எட்டணாப் பேசிப்போகிலும் நாம்
எந்தவிதத்திலும் சொந்தவிருப்பிடம்
வந்துமேலாருனள் சிந்தையில்பாரடி

ஓராயிரங்கோடியின் சூரியனும்கூடி
ஒடுங்காந்தத்தின் கீடுமா ரவிக்கூடுமா
ஒடுங்காந்தத்தின் கீடுமா மகா
ஒற்றையாழியின் குற்றமதகான்
கற்றுடையவர் முற்றுதல் செய்தும்

ஐரோப்பன் ஜப்பான் துர்க்கி சட்டி காமத்தோடு
அப்பர் பர்மா நாட்டோடும் சீனச்செட்டோடும்
ஆங்கிலேயர் வந்துமே கூடும் காக்கின்
ஆலொடியாகில பால்கொடுவங்காளி
சூழும்சுலாத் தமிழ்பொழி வர்த்தனர்

[ புரநாட்டு வளப்பத்தைக் கூறியது ]

நாட்டுவளப்பமதை நாயகிகேளடி
நல்லதொழில்கள்தானடி பயிர்ச்சிலவடி
நல்லதொழில்கள்தானடி நாம்
நாடுவிட்டு நாடு தேடிப்பயிர்செய்ய
கூடியாண்டுக்கு பாடு படும்படி

சாமாரி பொழிந்தும்மண்மேல் தண்ணீர்பெருகிடும்
சத்தாசமுத்திரமாகிடும் நின்றேகிடும்
சத்தாசமுத்திரமாகிடும் நீர்
சலப்பெருக்கினில் கலக்கமத்துமே
துலக்கமாயுழ பழக்கமாய்மழை

விவசாயஞ் செய்தல்முன்னே வம்பைப்போய்வாங்குவார்
வீம்பாக சிலவை வோங்குவார் கடன்வாங்குவார்
வீம்பாக சிலவை வோங்குவார் சிறு
வீடுகட்டிட நாடுதேமனம்
தேடியபொருள் ஜோடிவைத்திட

(வெள்ளாண்மை செய்யும் முறைகூறல்)

பத்தொன்பதாம் நூத்துக்குமேல், யென்ற மெட்டு.

விவசாயத்தொழின்முறை விவரமாய்க் கூறுகிறேன்
அவசாரமாகக்கேளும் ஆரணங்கே சொல்லிவாரேன்

ஆருவோம் வா வா நாமும் தேருவோம் வா வா
அயன்விதிப்படியோ நம்மின் மதியுமிப்படியோ

கையில்பொருளைவைத்துக் கணக்காகச் சாமான்வாங்கி
செய்யத்துணிந்திட்டாரே சிறப்புள்ள சமுசாரி

சிவன்செயல் விதியே தவர்பயன் ததிகெதியே
தவாரொருக்காலும் புவனம் மயங்கிடாதெளிவோ

ஏறுவைக்கவேணுமென்று ஏராளமாய் மாடுவாங்கி
கூரானவிஷக்கலப்பை கோர்வையுடன் பலதினுசும்
காலத்துக்கேற்றவடி முத்தம்மாள் சாலங்கள்மெத்தவுண்டு
யேலப்பசுங்கிளியே முத்தம்மா ஞாலத்திலுண்மையுண்டு

சமையலுக்கானசாமான் சரிவரவே புதிதாய்வாங்கி
அமையாதபாத்திரத்தை அருவையேபின் வாங்கிடுவோம்
அன்னப் பசுங்கிளியே நன்னய வண்ணிறதீஞ்சுவையே
முன்னோர்கள் செய்தவத்தால் நாம் யின்னகர்வந்துய்தமே

வேலைக்குச்செல்லுங்காலே விதவிதமாயுடைகள்போட
சேலையுடன் ஜவுளிபல தினுசுகளும் யெடுத்துக்கொள்வோம்
சேயிழைநல்லவளே குண சாயலையுள்ளவளே
ஓயாக்கவலையடி யிது மாயக்குவலையடி

பீப்பாதொட்டிஜாடியும் பெட்டியுங்கூடைமுறமும்
சோப்புக்கு வாஙகவேணும் சொல்லிவரேன் யின்னங்கேளு
சூதானதேசமடி பெண்கள் வாதுகள்ரொம்பவடி
ஆதாயமில்லையடி வுற்றால்பாதகத்துன்பமடி

விரில்லாபச்சரிசி விதவிதமாய் தானரைக்க
ஓர்விதக் குதாம்புகளும் மளவில்லாத கருவிகளும்
ஓர் காரணக்காரன்வேலே சீமையில் நூதனமெத்தவடி
பேர்போன பர்மாவில்பெண்கள் ஜோராய்வருவாரடி

வண்டித்தினுசுகளும் வகைரெண்டு வேணுமல்லோ
பெண்டீர்களுக்குவுற்ற கொசுவலையும் வாங்கவேணும்
பெண்டுகள் ராஜ்ஜீயமே மதியாத சண்டாளர்தேசமடி
தண்டாதவார்த்தைகளை யவர்கள் முண்டமாய்சொல்வாரடி

இருப்பிடம் திடப்படுத்தி யேற்றதொரு கொட்டகையும்
குருப்பான சிநேகருண்டு கோருகிறேன் செவியில்கேளும்
குணமுடையவராம் யீகை மனமுடையவராம்
ஜனங்களுக்குதவி மிகவும் கனமுடையவராம்

கையானருகிருக்கும் கம்பையெனும் வூர்விளங்கும்
அய்யாகருப்பய்யாவை யண்டினலேபேர்துலங்கும்
அருவோம் வா வா நாமும் தேருவோம் வா வா
அன்னமேபாரு மனதை எண்ணியே தேரு

( சேவாவுக்கு நிலம்பிடித்தல் )

அள்ளி அள்ளி நீர்குடிக்கும் மென்ற மெட்டு.

சீராய்நிலம்பிடித்து சீக்கிறமாகவே
செல்வேறுங் கட்டும்நேராவே திடம்பூராவே
செல்வேறுங் கட்டும்நேராவே உயர்
தேங்காய்பழத்துடன் பாங்காய் நிலத்தினில்
சான்கலப்பையை தாங்கலாய் யேறிட்டு

சேவாய் நிலமுங்கொண்டு செந்நெல்விளைவிக்க
சேர்த்தார் பலவகையோர்க்க உழுதர்க்க
சேர்த்தார் பலவகையோர்க்க சில
சிப்பந்தியாட்களும் யெப்போதும்வேலையை
தப்பிதமில்லாமல் யொப்பங்கள் வைத்திட

சம்பளக்காரிரண்டு ஜோடியுமேபோதும்
தய்யலே சொல்வாய் நீ யேதும் அதையோதும்
தய்யலே சொல்வாய் நீ யேதும் அந்தச்
சாத்தனும் லெட்மணன் மூத்தவனும் தம்பி
காத்தனும் நாலுபேர் யேற்றதோர்வேலைக்கி

( சம்பளக்காரர் சொல்வினு )

முன்னோர்கள் செய்தவத்தா லெண்ணுமழைபெய்யும்
மூங்கிப்பட்டையாய் செய்திடும் தலைக்குட்டையும்
மூங்கிப்பட்டையால் செய்திடும் ஓயா
மழையதுபெய்யவும் விளைந்திடும்புல்லை
களையோடுமனம் தெளிவாகும்படி

ஏழுபல்லுக்கலப்பை யிதமாகத்தூக்கியே
எல்லோரும் வயலைநோக்கியே உழவாக்கியே
எல்லோரும் வயலைநோக்கியே நாம்
எந்தநேரத்திலும் சொந்தவேலையைப்போல்
பந்தமில்லாமதில் சந்தோஷமாகவே

இன்னமொன்று பாருங்கள் யிருக்குதுவேடிக்கை
யெல்லோருங் கம்புகள்பிடிக்க சிலம்படிக்க
யெல்லோருங் கம்புகள்பிடிக்க நாம்
யெட்டி யெட்டிக்குத்த நட்ட நடவுகள்
திட்டமாய் நாலுபேர் கெட்டியாய்ச் சேர்ந்தோம்

வரல்காப்பி வெல்லமோடு வகையான கவணியும்
வருகுமிரம்பவுண்ணியும் காப்பித்தண்ணியும்
வருகுமிரம்பவுண்ணியும் அதோ
வல்லமையுள்ள நெலி நெலிச்சானும்
மெல்லியராக்கி செல்லிகொசுவானும்

சத்தைக் குறைக்குமதாம் நெத்திலிமீன்பொடி
சரிமொச்சைப் பயருடன்கூடி வல்லக்கொடி
சரிமொச்சைப் பயருடன்கூடி அந்த
சண்டாளன் யின்றைக்கி கண்டேனேயாமாகில்
தண்டாத வார்த்தையை முண்டாதரமாக

சவ்வாரி மிளகுரசம் சாயமாகப்போட்டு
சத்தைக் குறைக்கிறார்விட்டு தினம்விட்டு
சத்தைக்குறைக்கிறார்விட்டு வேறு
சாமான் பயர்பச்சை காம்பரிகாய்களும்
சாம்பார்கருணைக் குழம்பதுசெய்தாலென்

(சம்பளக்காரரை முதலாளி கண்டித்தல்)

நாளுக்கு நாளிருந்து நாளைக்கடத்துவார்
நாணமல் பொழுதைப் போக்குவார் எஜமான்கேழ்க்கிறார்
நாணமல் பொழுதைப் போக்குவார் யிது
ஞாயமாவிவ சாயமாநஞ்சை
உபாயமா செய்தால் நேயமாய்வரும்

திட்டியிருக்கும்கூலி யாட்க்கள் பலவிதம்
தீங்காகநெஞ்சில் நாள்நிதம் பிடியாவதம்
தீங்காகநெஞ்சில் நாள்நிதம் திடம்
தேருதலில்லா மாருபாடாகி
கோரியபடி யேறியும்விட்டு

வேலைக்குச் செல்லுங்காலே வீட்டைச்சுத்துவாரோ
வேஷக்காரன்போல் பார்ப்பாரோ மிகயேய்ப்பாரோ
வேஷக்காரன்போல் பார்ப்பாரோ பச்சை
வெத்திலேயோடு நித்தமேகொண்டு
சுத்தமுநாணி கத்துவதோடு

மேலியின் செல்வத்திலே மிதமாய்வருவாரோ
மேநோக்கி வீட்டைப்பார்ப்பாரோ சொல்கேழ்ப்பாரோ
மேநோக்கி வீட்டைப்பார்ப்பாரோ கொஞ்சம்

மெத்தினபுத்தியை நித்தமும்வைத்துமே
புத்தியீனமோடு விர்த்தியாய் செய்துமே

சம்பளம் பேசிவைத்த சமுசாரிக்கேர்க்குமா
சட்டக்கணக்கில் தாக்குமா மனமேர்க்குமா
சட்டக்கணக்கில் தாக்குமா நாளும்

சரியாவந்துமே உரியவன்வந்து
தெரியச்சொல்லியும் பரிசம் கேழ்க்கையில்

இப்படி செய்துவந்தால் யெஜமான் பொருப்பாரோ
எண்ணம் மனதில் வைப்பாரோ மனஞ்சகிப்பாரோ
எண்ணம் மனதில் வைப்பாரோ எல்லா

வேலைமுடியும் காலம்வரையில்
சிலமத்தோடு நீளத்தில்வைத்து

ஆரிரண்டுமாதம்வரை யன்னவன்பேசியே
அருகுறையாகவேகியே கூலிபேசியே
அருகுறையாகவேகியே அவன்

அடுத்துச் சம்பளம் கொடுத்திடுவென
தடுதச்சொல்லியே படுத்திருந்தவன்

கணக்குக் கச்சாத்துகளும் கைமாத்துப் பணத்தையும்
கருதாமல் முன்னடத்தையும் முடியாத்தனத்தையும்
கரு,தாமல் முன்னடத்தையும் விவ

காரங்கள்மெத்தவே நோங்கள் போக்கியே
யீ ங்கிவைத்துமே வீரங்கள்பேசியே

ப்ஞ்சாயக்கெடுவைத்து நெஞ்சாரவுண்டவன்
பத்தம்நினைக்கவில்லையே யெஜமான்சொல்லவே
பத்தம்நினைக்கவில்லையே கொடும்

பாதகமாக நீதமில்லாமல்
வாதங்கள்பேசி சூதாகச்செய்த

சரிவரவேலைசெய்தால் சம்பளம்பெருவாயோ
சகசண்டியாகவருவாயோ நீ புரிவாயோ
சகசண்டியாக வருவாயோ தாழ்வு

செய்திடும்நாள்வரை உய்யுவேன்சம்பளம்
மெய்யும்தவாது பொய்யில்லைநானைவா

## தந்தானமடி தந்தானமடி யென்ற மெட்டு.

( இராமலிங்கத்துக்கும் முத்தம்மாளுக்கும் சம்பாஷணை )

கவணியரிசிக்கு துவயலரைக்கிற கட்டாணிமுத்தே முத்தம்மாள்
கட்டாணிமுத்தே முத்தம்மாள் கட்டாணிமுத்தே--ஒரு
கட்டிவெல்லம்பஞ்சமானால் கடையும்பஞ்சமாமாம் முத்தம்மாள்
கடையும்பஞ்சமாமா முத்தம்மா கடையும்பஞ்சமாமா
கையிலரக்காசுமில்லாது கடைக்குச் செல்வதேது மன்னவா
கடைக்குச்செல்வதேது மன்னவா கடைக்குச் செல்வதேது
கடன்கொடுக்கமாட்டாரய்யா காரியமாகாதய்யா மன் [போனால்
காரியமாகாதய்யா மன்னவா காரியமாகாதய்யா [னவா
கிடியாரப்படி துடிசாரத்துடன் பெட்டியைதூக்கிவாவா முத்தம்
பெட்டியைதூக்கிவாவா முத்தம்மா பெட்டியைத் தூக்கி [மா
கார்டிங்வேலைப்பார்க்கிறகாத்தானைப்போகச்சொல்வாய் [வாவாநம்
காத்தானைப்போகச்சொல்வாய் முத்தம்மா காத்தா [த்தம்மா
கச்சாதுப்படிசாமான் வாங்க கடைக்கிப்போகச்சொன்னால் காத்
கடைக்குப்போகச்சொன்னால் காத்தானை கடைக்குப் [தானை
கணக்குடனேவாங்கிச்சரக்கு கணக்குவரவேணும் மன்னவா
கணக்குவரவேணும் மன்னவா கணக்குவரவேணும்
வாலகாப்பிதண்ணியோடுபால் வார்க்கிலேயோடி முத்தம்மா
வார்க்கிலேயோடி முத்தம்மா வார்க்கிலேயோடி விர்க்கிற
வங்காளியொருவன் கொண்டுவந்தாலோட்டா வாங்கி
வைப்பாயடி முத்தம்மா வாங்கி வைப்பாயடி
கத்திரிவத்தலும் நெத்திலிப்பொடியும் கணக்குடன்
சமைப்பேன் மன்னவா கணக்குடன் சமைப்பேன் வேலைக்
காரர்கள் வந்துஓலமிட்டால் காதலியெனனசெய்வேன்
மன்னவா காதலி யென்னசெய்வேன் மன்னவா காதலி
குளத்துநீரையளவெடுத்து முளத்தளவுபோடு ரசத்தை
முளத்தளவுபோடு ரசத்தை முளத்தளவுபோடு புளி
முளகாய்கொஞ்சம் துவயல்பண்ணி போட்டனுப்பிவிடு
முத்தம்மாள் போட்டனுப்பிவிடு முத்தம்மா போட்ட

## அள்ளி அள்ளி நீர்குடிக்கும், யென்ற மெட்டு.

நிலத்தின் தன் முதலாளி குணத்தை யரியாது
நீக்குபோக்குகள் சொல்வது பொருள்மீது
நிக்குபோக்குகள் சொல்வது அவர்
நீதியில்லாத சேதி சொல்லியே
ஓதியே தினம் பேதலேந்துமே

உலகத்தில் பணம் பெருத்து உத்தமரைக்கோரி
ஓதிடுவார் சதிகாரி பொருள் தாரி
ஓதிடுவார் சதிகாரி அங்கு
உள்ள நிலங்களை மெள்ள நிலுவையில்
செல்லை நிறுத்தியே துள்ளவகை சொல்லு

இரண்டுவட்டியெடுத்து யீடேரவிடமாட்டார்
யீகையில்லாத மனமிட்டார் கணக்கிட்டார்
யீகையில்லாதமனமிட்டார் அவர்
யிவ்விதமாகவே ஒவ்வாதவட்டியை
செவ்வையாய்வாங்குவார் ஒவ்விமனத்துடன்

பணத்தின் பெருமையினால் பயிற்சிலவாளியை
பரிமுதல்செய்வார்யேழையாய் பணக்கோழையாய்
பரிமுதல்செய்வார்யேழையாய் கொடு
பஞ்சமாபாதகம் நெஞ்சினில்கொண்டு
வஞ்சமதாக கஞ்சமனத்தோடு

நீதிகுரிப்பரிந்தால் வாதிக்க செய்வாரோ
நிட்சயமில்லாப் பொருள்க்காரோர் நீடித்திருப்பரோ
நிட்சயமில்லாப் பொருள்க்காரோர் நமன்
நெடுங்கயர் வீசி படுந்துயர் வேகி
படுபணமோடு விடுமோயில்லையே

எத்தொழிலு முயற்சி மிவசாயமே திடம்
எட்டஷ்டமி குடிகொள்ளுமிடம் வதுவிசேடம்
எட்டஷ்டமி குடிகொள்ளுமிடம் நல்
எத்திசைக்கிங்குண முத்தியான பொருள்
சித்திக்கிங்மல்லா விர்த்தியான தொழில்

[ நல்லொழுக்கமில்லாததைப்பற்றி ]

பூவுலகத்திலிது பொய்நாடு பர்மாவே
பொய் நோட்டு யெழுதும் பூராவே கைதிநோாவே

பொய் நோட்டு எழுதும் பூராவே யீகை

பொருத்தவர்களை மருந்துக்கொண்டுமே
யிருப்புகளையும் பரித்துக்கொள்கிறார்

சாக்கிகள்லஞ்சம்வாங்கி சப்கோர்ட்டுக்கேகுறார்
சண்டாளர்நரகில்வீழ்கிறார் ஆசீர்வாகுறார்
சண்டாளர்நரகில்மூழ்கிறார் நல்

தருமம்சிந்தனை ஒருபோதுமில்லா
கருமநிந்தையில் விரும்பிடும்புல்லர்

நல்லோர்களுக்குக்கால மில்லாதவேளையில்
ஞாயமில்லாதநாளையில் அதர்மச்சாலையில்
ஞாயமில்லாத நாளையில் நல்ல

நன்றி செய்தவரை தண்டனையிற்கொண்டு
மன்றுக்கிழுத்திட சண்டாளன் பொய்யால்

ஒருவர்மேல் குற்றங்கொள்ள ஓயாதகேசுகள்
ஓடோடி வருவான் பேதாக்கள் யீகைசாலிக்குள்
ஓடோடி வருவான் பேதாககள் பேதா

ஒன்று நாலுவாங்கி கண்டுகொள்ளவில்லை
சென்று வருகுவான் பன்றிச்சீனன்கடை

( சாதிபேதம் நல்லவை )

பத்தாவுக் கேற்றதொரு பாவையின் கீர்த்தியை
பாடுவேன் நல்ல நேர்த்தியாய் மிகுபூர்த்தியாய்
பாடுவேன் நல்ல நேர்த்தியாய் சில

பாதகி கூட்டிக்கொண் டோடியே ஓட்டமாய்
வாதனையில்பட்டு ஜாதிவிட்டேகியே

ஜாதியனந்தமாக சண்டாளி செய்திட்டாள்
சன்னிதழ்மிகவே பெருக்கிட்டாள் வினை தொடுத்திட்டாள்
சன்னிதழ்மிகவே பெருக்கிட்டாள் பல

சந்தடிவுண்டு நிந்தைகளுண்டு
மந்தையில் நின்று சிந்தையில் கொண்டு

தன்தாரமன்றிப்பிர தாரத்தை யிச்சிக்க
தலையெடுத்திட்டாள் கோரிக்கை நடாதிக்க
தலையெடுத்திட்டாள் கோரிக்கை பெருஞ்

சட்டுவ நெட்டடி கட்டையால் தட்டியே
மட்டுப்படாபுத்தி தட்டுப்படும்படி

கீழோர்கள் ஜாதிதன்னை மேலோர்கள் கொண்டாடி
கெட்டலைந்திட்டார்கள் கோடி அலைந்தோடி
கெட்டலைந்திட்டார்கள் கோடி அது
கெருவமில்லையே தருவங்கெட்டதில்
பருவந்தவறி திரிந்தலைந்திடும்

ஜாதிமானுக்கழகு ஜாதியுந் தோன்றுமே
சந்ததி மிகநின்றுமே விளங்குமே
சந்ததி மிகநின்றுமே சிவ
சங்கரன்றுணை தங்கிடாவராம்
பொங்கிடவருள் இங்குநீதர

செந்தமிழை யுலகினில் வந்துதவு யென்ற மெட்டு.

இப்புவியில் செப்புதற்கு யெப்போவருவாயோவெண்
பொற்பாத முனீஸ்பரனே வொய்யாரனே
அற்புதச் சிங்காரத்தையனே நல்
லாதியந்தமும் நீயுந்தந்துமே
சூதுசெய்யாத மாயவேளையில்
சித்தாந்தத் திருச்சடைக்கையன் வாதர்துய்யன்
விர்த்தாந்திச் செரிமலர் மெய்யன்

ஓயாத கவலையில் வாயாத பிரபஞ்சம்
தீயாளருக்குத் தஞ்சமோ கொடுவஞ்சமோ
சேயன் தொழுதல் கொஞ்சமோ திருச்
சேவைதந்திட யாவல்தீர்த்துமே
காவல் கொண்டுநீ பூவுலகினில்
காருண்யக் கலியுகக்காரன் கெம்பீரசூரன்
யாரென்னைக் கார்ப்பது கூறேன்

நித்தமும் தொழுவதற்கு சித்தமுமனமிரங்கி
உத்தமா வருள்செய்யவேணும் சிறியேனும்
பக்தியை விடுவதில்லேனும் வெண்
பரிமலர் தெரிசனம் குறையரச் செய்திடும்
மாகதசேரியில் நிறைவுடன் தொழுதிடும்
மாக்ஷிமைஸ்ரீ தீக்ஷண்யப்படையோன் செந்தமிழ்ப்பாடும்
நாக்ஷியப்பன் காக்ஷியருளுடையோன்

முதற்பாகம் முற்றிற்று.
இரண்டாம் பாகம் வேண்டுகோளின்படி செய்கிறது.

உ

சிவமயம்.

# இராமகோட்டி அச்சுக்கூடம்.

## பிரின்டர் அண்டு புக் பைன்டர்

## நெ. 20. 32-வது வீதி

## இரங்கோன்.

எமதன்பார்ந்த ஐயா!

இவ்வச்சுக்கூடத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களுக்கு வேண்டிய குறிப்பு, பேரேடு, காட்டுப்புத்தகம், திட்டச்சிட்டை, மாசத்திட்டம், பல சயிசு புத்தகங்களும, லெட்டருக்கு சிகப்பு, வெள்ளை, புத்தகங்களும், கணக்குநகல், வட்டிச்சிட்டை, ஐந்தொகை, குறிப்புநகல், சிகப்பு வெள்ளைத்தாள் புத்தகங்களும். வியாபாரிகளுக்கும் மற்றும் யாவர்களுக்கும் வேண்டிய அச்சுவேலைகளும், இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, பர்மா ஆகிய பாஷைகளில் பலவித வர்னங்களாலும் குறித்த தவணையில் கொடுக்கப்படுமென்பதில் ஐயமில்லை. ஆதலால் தங்களுக்கு வேண்டிய எல்லாவித அச்சுவேலைகளுக்கும் "இராமகோட்டி" அச்சுக்கூடத்திற்கு அனுப்புங்கள்.

ஆர்டர்படிக்கு வி. பி. மூலமாயும் பணம் பெற்றுக் கொள்வோம்.